**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.5/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : V.C.R கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**02.04.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 31.03.2008ம் தேதியிட்டு பார்வதி வகையறா எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். (**கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 26.03.2015ம் தேதியிட்டு நரசம்மாள் வகையறா எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். (**கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

2. பட்டா எண்.2110ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) புல எண்.256க்கான அ பதிவேடு இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**அ பதிவேடு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சொத்திற்கான புல வரைபடம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**புல வரைபடம் வா.சா.ஆ 5**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1975 முதல் 29.01.2024 வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1433 ம் பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட அசல் மருத்துவ சான்று தாக்கல் செய்கிறேன். **(மருத்துவ சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 15.12.2016 ம் தேதியிட்டு தாமோதரன் வகையறா 1 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 12.06.2015 ம் தேதியிட்டு ருக்மாங்கதனிடமிருந்து கஜேந்திரன் கிரையம் வாங்கிய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1098 ல் நடேசன் பெயரிலுள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)